KAMARAJ COLLEGE

# KAKHITHAKKURAL

JAN-2020 STUDENT MAGAZINE VOL-I ISSUE-08

**STUDY HARD. DO GOOD AND THE GOOD LIFE WILL FOLLOW.**

## பதிவுகள்...

மூன்றெழுத்துகள்...

வாழ்க்கை...

தமிழ்இன்பம்...













## Editor

M. Subramanian

## Sub.Editor

DJSG. Chris Beniot

## Columnists

M. Muthumathi Prasanth

C. Mahesh Kumar

## Photography

S. Peter Ashvanth

C. Mahesh Kumar

DJSG. Chris Beniot

M. Subramanian

## Graphics

A. Kasi Ramakrishnan

M. Raakesh

D. Parthiban Raj

N. Manoj Kumar

# மூன்றெழுத்துகள்...

**A. Ram Kumar, III B.Sc Physics**

Kamaraj College (SF)



உடல் மூன்றெழுத்து...
உடலை இயக்குகின்ற
உயிர் மூன்றெழுத்து...
உயிர் தந்து பாதுகாக்கும்
அம்மா மூன்றெழுத்து...
அம்மாவின் அன்புக்குப் பிறகு
அறிவு தந்து வளர்த்த
அப்பா மூன்றெழுத்து...
கல்வி மூன்றெழுத்து...
கல்வி கற்பிக்கின்ற ஆசான்
மூன்றெழுத்து...
ஆசான் மேல் நான் வைத்துள்ள
பக்தி மூன்றெழுத்து...
பக்தியோடு வழிபடும்
கோயில் மூன்றெழுத்து...

**கோயிலின் ஈசன் மூன்றெழுத்து**
**இம்மூன்றெழுத்துக்கள்**
**சிறந்தால் வாழ்வில் கிடைக்கும்**
**வெற்றியும்**
**மூன்றெழுத்து....**

# வாழ்க்கை...


**C.Mathan Nantha Kumar, I BCA**

Kamaraj College (SF)




வாழ்வு என்னும் வாழ்க்கையை வாழ, உயிராக அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கையென

பாசமிகு சகோதரர்களோடு நான்....

இளமை துள்ள பள்ளி சென்றோம்.

அறிவு என்னும் காற்றை

கல்வி என்னும் நாசியால் சுவாசித்தோம்.

மேன்மை அடைந்தோம்.

திறமையை உணர்ந்தோம்.

தடைகளை தகர்த்து பெருமை அடைந்தோம்.

புகழ்பெற்று சாதனை பல புரிந்தோம்.

நட்பெனும் செல்வத்தை அடைய உண்மையை உணர்த்திடவே எண்ணினோம்.

அன்பு என்னும் குணமெய்த
மணம் என்னும் இலக்கை அடைந்தோம்.
அழகு என்னும் நெருப்பு நிலாவை ரசித்து
காதல் என்னும் வலி நிறைந்த சுகம் கண்டோம்.

கடமைகளை சிறப்பாகச் செய்து
பிள்ளைகள் பல பெற்று
பாசம் அதனை பொழிந்தோம்.
வெற்றி என்னும் சிலையை செதுக்க
தோல்வி என்பதை உடைத்தோம்.
இப்பாடத்தைபிள்ளைகளுக்குகற்பித்து
வளர்த்துநிறைவுஅடைந்தோம்.
ஒரு நாள் பிரிவு என்பதை நானும்அடைந்து
திடமாய் இருந்து…சோர்வுஅடைந்து…

சோகமாய் இருந்து...தனிமை அடைந்து...

அசதி என்னை நாட... உதவியை நான் நாட...

முதுமையை உணர்ந்து மறதியால் பல மறந்து
பாவந்தனை சுமந்து வறுமையால் வாட
வெறுமைஉணர்ந்து என் கண்வழியாக உயிர்
பிரிய சாதல்வேண்டும்...

வெற்றுடல் நிலையற்றது....

அன்பு மட்டுமே நிலையானது.

இதுதான் வாழ்க்கை.

அறிவாய் மானிடா!!!!

# தமிழ்இன்பம்...

S. Vetri Selvi, III B.Sc Mathematics

Kamaraj College (SF)



மொழிகளின் தாய் நம் தமிழென்போம்...

மொழியே தனிமனித அடையாளம் என்போம்...

மொழியே உணர்வினை வெளிப்படுத்தும் கருவி...

மொழியாம் தமிழ் பாருள்ளவரை

நிலைத்திருக்கும்!!!

தமிழெங்கள் தாயென பெருமிதம் கொள்வோம்...

தனித்து இயங்கும் தன்னிகரில்லா மொழி

நமது தமிழ் மொழி...

தமிழினிது... தமிழ் மக்கள் என்றும் இனிது...

தமிழ் மொழியின் சிறப்பு என்றும் இனிது...

தமிழில் வலி மெலி இடையின சிறப்பினிது...

தமிழின் ழகரச் சிறப்பு இனிதினிது...

தமிழ் மொழியின் இலக்கணச் சிறப்பு இனிது...

தமிழின் இலக்கியப் பரப்பு இனிதினிது...

தமிழின் பாடுபொருள் என்றும் இனிது...

தமிழின் இளமை தமிழரின் முதுமையினிது...

தமிழன் என்று தலைநிமிர்ந்து சொல்வோம்...

தமிழர் என்று பெருமிதம் கொள்வோம்!!!

வாழ்க தமிழ்!!!

# MOTHER

**N. Navin, II B.Com**

Kamaraj College (SF)



